| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ------------------------------ | ---------------------------------------- | ------------------------------------ | ------------------------ |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,317,632 ஆன நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் ரூபா 202,922 தொகை 03 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் நிலுவை வருமானமாகும். | 2022 ஆண்டினுள் அனைத்து நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவையின் 218 விதி | கிரயம் ரூபா 60,076,799 ஆன காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு வருடத்திலும் ஒரு முறை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 | பிரதேச சபையில் சேவையிலுள்ள ஊழியர் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் 11 பேர்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 75,000 ஊழியர் பிணை வைப்புச் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் பிணை வைப்பு உரிய முறையில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2021/09/29 ஆம் திகதிய PFD/PMD/Cir/2021/01 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை | சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தம் வழங்கும் போது நிறுவன தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயறிடப்படும் மூவர் கொண்ட குழுவொன்றின் மூலம் தகைமை உறுதி செய்யாது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 3,337,915 பெறுமதியான 06 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இதன் பின்னர் கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

